# அம்பாந்தோட்டை பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 டிசெம்பர் 20 ஆந் திகதி வரை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள், செயற்திறன் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை

**(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 36 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 28,033,371 ஆகும்.

(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 1,415,277 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருவாய் நிர்வாகம்

#### 2.1.1 கடை வாடகை

சபைக்குரிய 12 பெல்கஸ்வெவ கடைகளிலிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 598,029 வாடகை நிலுவை அறவிடப்படவேண்டியிருந்தது. அவ்வாடகை

நிலுவையை அறவீடுவது சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

### 2.1.2 சந்தை வரி

நவ மயுரபுர வாரச்சந்தையில் 2011 ஆம் ஆண்டிற்கான வரியைச் சேகரிக்கும் உரிமையைப் பெற்ற குத்தகையாளர் 2011 பெப்ரவரி 07 முதல் பெப்ரவரி 28 வரை நடைபெற்ற 7 சந்தைகளுக்குமான வரியைக் கொடுப்பனவு செய்யாது புறக்கணித்திருந்தார். நிலுவையான ரூபா 47,750 அறவிடப்படுவதற்கு 2012 பெப்ரவரி 20 வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.1.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2011 ஆம் ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணம் 46 விற்பனை நிலையங்களிலிருந்து முறையாக அறவிடப்படவில்லை. 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 223,150 ஆகும். இந்த அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(4) (ஆ) மற்றும் 152(4) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.1.4 ஏக்கர் வரி

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி நிலுவை ரூபா 7,156 ஆகும். இதில் ரூபா 4,278 முன்னைய ஆண்டில் அறவிடப்படவேண்டிய நிலுவை ஆகும். ஏக்கர் வரி வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.2 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரின் எழுத்துமூல முன் அங்கீகாரமின்றி உபசரிப்புக்கென ரூபா 38,106 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 14(1) ஆம் விதியின் பிரகாரம், வருடாந்த வரவு, செலவுத் திட்ட வரம்பிற்குள் செலவு மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தொகை போதாதெனின் அதன் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறு குறை நிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்படாது 2011 ஆம் ஆண்டில் வருடாந்த வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாட்டு வரம்பை மீறும் வண்ணம் ரூபா 8,980,790 செலவிடப்பட்டிருந்தது.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவுக் குழுவின் தீர்மானம் ரூபா 2,853,012 கூட்டுத் தொகையுடைய 09 கொள்வனவுகளுக்குப் பெறப்படவில்லை. ரூபா 2,136,349 கூட்டுத் தொகையுடைய 05 கொள்வனவுகளுக்குத் தொழில்நுட்ப மதிப்பாய்வக் குழுவின் அறிக்கைகள் பெறப்படவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது 2007 ஜுன் 16 அந் திகதிய 2007/03 ஆம் இலக்க அமைச்சினது சுற்றறிக்கைப் பிரகாரம் விடுமுறை தினக் கடமைகளுக்கு விடுமுறை தினக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாது இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது விடுமுறை தினச் சம்பளமாக ரூபா 97,610 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 06/2006(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய சீவனப்படி ரூபா 350 ஆகும். எனினும், நாளொன்றுக்கு ரூபா 400 வீதம் வழங்கப்பட்டமையால் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு கூடுதலாக ரூபா 9,200 சீவனப்படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரது 2006 நவெம்பர் 28 ஆந் திகதிய தபபா/பரிநி/02/07 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் பொதுசனத் தொடர்பு

உத்தியோகத்தர் பதவிக்கு மாதாந்தம் ரூபா 4,500 மாத்திரமே படியாக வழங்கப்படலாமெனினும், மாதாந்தம் ரூபா 5,175 படியாக வழங்கப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கிலிருந்த ரூபா 2.255,344 கூட்டுத் தொகையுடைய காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மூன்று வங்கிக் கணக்குகளது வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரிப்பதில் நீண்ட தாமதம் நிலவியது.

(இ) பதகிரிய வாரச் சந்தைக்கான இடத்தை அபிவிருத்தி செய்யும் வேலை அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, 2011 ஜூலை 12 ஆந் திகதியன்று ரூபா 373,567 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வாரச் சந்தையை நடாத்துவதற்குத் தேவையான சகல வசதிகளும் தயாராக இருந்தபோதும், 2012 பெப்ரவரி 16 அன்றும் அது பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதி ரூபா 93,208 ஆகும்.

(உ) கட்டிட நிர்மாணத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் திட்டத்தின் பிரகாரம் நிர்மாண வேலை நடைபெற்றதைக் கள உத்தியோகத்தர் பரிசீலித்து உறுதிசெய்து, இணக்கச் சான்றிதழை வழங்குவதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2.5 ஒன்றிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

பிரதேச சபை ஒன்றிணைந்த திட்டத்தையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தையும் தயாரிக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்